**செ.வெ. எண்: 541** **நாள்: 02.09.2011**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (2.9.2011) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் ஒளிபரப்பு சேவைகளைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் துவக்கி வைத்தார்கள்.

அரசு கேபிள் டிவி நிறுவனத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:- "அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி சேவையை இன்று தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கேபிள் டிவி இணைப்பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு அதன் காரணமாக பொதுமக்களிடமிருந்து அதிக அளவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஒரு குடும்பத்தினரே இந்த தொழிலில் ஏகபோகம் அனுபவித்து அதிக லாபம் பெற்று வருகின்றனர். எனவே தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கேபிள் டிவி தொழிலில் உள்ள ஏகபோகத்தை தடுத்து அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு வழங்கப்படும் என்றும், அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவி இணைப்பு கொடுக்கப்படும் என்றும் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தேன். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இன்று முதல் ஒளிபரப்பு சேவைகள் தொடங்கப்பட்டு தமிழக அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக மக்களுக்கு குறைந்த செலவில் நிறைந்த சேவையை வழங்கவுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உறுப்பினர்களாக சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் தொலைக்காட்சி சேவையை பெறும் சந்தாதரர்களிடமிருந்து மாதச்சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டிவி ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும். எனவே கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளின் மூலம் தமிழக மக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டிவி இணைப்பை பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொண்டு, அனைத்து கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும், தமிழக மக்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்."

அரசு கேபிள் டிவி நிறுவனத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தமைக்காக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. சுஜாதா சந்திரன் நன்றி தெரிவித்து பேசியதாவது:- “மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். அம்மா கடந்த ஆட்சியில் கேபிள் டிவி கட்டணம் 100 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை வசூல் செய்தார்கள். எங்கள் மாதிரி ஏழை எளிய மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அம்மா ஆட்சிக்கு வந்த பிறகு கேபிள் டிவியை அரசுடமை ஆக்கினீர்கள். இது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. அதுவும் 70 ரூபாய் கட்டணம் என்று சொல்லியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. அதுவும் 90 சேனல்கள் வழங்கியிருப்பது மிகவும் சந்தோஷமாக உள்ளது. எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.’’

அரசு கேபிள் டிவி நிறுவனத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தமைக்காக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கேபிள் ஆப்பரேட்டர் சரவணகுமார் பேசியதாவது:- “மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு வேலூர் மாவட்ட கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். எம்.எஸ்.ஓ. என்ற சர்வாதிகாரியின் பிடியிலிருந்து எங்களை மீட்டதோடு மட்டுமல்லாமல் கட்டணச் சேனல்களின் பாதிப்பிலிருந்தும் நாங்கள் பாதுகாக்கப்பட்டதாக உணர்கிறோம். மற்றும் எங்கள் தொழில் அங்கீகாரம், பாதுகாப்பு இரண்டையும் ஒருங்கே பெற்றதாகவும் நாங்கள் இன்று உணர்கிறோம். கடைகோடி ஆப்பரேட்டர்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்ற அம்மாவின் ஆணை இன்று நிறைவேறியதாக நாங்கள் உணர்ந்து கொண்டு இருக்கிறோம். செப்டம்பர் 2–ஆம் நாள் எங்கள் வாழ்நாளில் பொன்னாள். மற்றும் எங்களுக்கு கேபிள் டிவி அரசுடமை ஆக்கி ஏதோச்சிகார அதிகார வர்க்கத்திலிருந்து எங்களை மீட்டு எங்களை கொத்தடிமைகளாக இருந்த எங்களுக்கு நீங்கள் ஒரு மறுவாழ்வு அளித்திருக்கிறீர்கள் உங்களை கேபிள் டிவி ஆப்பரேட்டர்களும், எங்கள் டி.சி.ஓ. இயக்கமும் வாழ்நாள் பூர நன்றிக் கடன்பட்டு இருக்கிறது. நன்றி வணக்கம்.”

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் தலைவர், தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மைச் செயலாளர் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 2.9.2011